(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

**இல. 47.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 யூலை 20 புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பதில் சனாதிபதி, பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்**, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ தம்மிக்க பெரேரா** , முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ ஹரின் பிரனாந்து,** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ ரொசான் ரணசிங்க,** நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ திலும் அமுனுகம**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ லசந்த அலகியவன்ன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ திஸகுட்டி ஆரச்சி**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ (கலாநிதி)(மேஜர்) பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ அகில எல்லாவல**

**கௌரவ லலித் எல்லாவல**

**கௌரவ செல்வராசா கஜேந்திரன்**

**கௌரவ கோவிந்தன் கருணாகரம்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சாகர காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல**

**கௌரவ உதயன கிரிந்திகொட**

**கௌரவ லலித் வர்ண குமார**

**கௌரவ கெவிந்து குமாரதுங்க**

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ**

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ சிறிபால கமலத்

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ பிரேமலால் ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ ஜீவன் தொண்டமான்

கௌரவ சாமர சம்பத் தசநாயக

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ சனத் நிசாந்த

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ ஜகத் புஷ்பகுமார

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ அருந்திக்க பர்னாந்து

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸாந்தி

கௌரவ சஜித் பிரேமதாச, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ உத்திக பிரேமரத்ன

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ சாந்த பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ விஜித பேருகொட

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ ச. வியாழேந்திரன்

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ எம். யூ. எம். அலி சப்ரி

கௌரவ ஜகத் சமரவிக்ரம

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ ஜோன் செனவிரத்ன

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ டீ. பி. ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்***: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார் :—

"கௌரவ உறுப்பினர்களே, மக்கள் வாக்குகளால் சட்டவாக்கத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் என்ற ரீதியில் நாம் அனைவருக்கும் இன்றைய பாராளுமன்ற அமர்வு முன்னெப்போதும் இல்லாதளவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தினமாகும் என்பதை முதலில் உங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். இந்த விசேட சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் மாத்திரமன்றி, எமது முழு நாடும், முழு உலகமும் இன்றையதினம் பாராளுமன்றத்தில் என்ன நடைபெறுகிறது என்பது தொடர்பில் வழக்கத்தைவிட அதிகமாக கவனம் செலுத்தியுள்ளன என்பதில் ஐயமில்லை.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 40(1)(ஆ) உறுப்புரை மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 7 இற்கு அமைய சனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பத்தில் வாக்குச் சீட்டின் இரகசியத் தன்மையைப் பேணுவதற்கு பாராளுமன்றம் 1981ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைப் பின்பற்றி இன்றைய அமர்வின் நடைமுறைகளை முன்னெடுத்துச் செல்லவிருப்பதுடன், அனைத்து நடைமுறைகளையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும்வரையும் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் மிகவும் ஒழுக்கத்துடன் தமது ஆசனங்களில் அமர்ந்திருந்து முன்மாதிரியான பாராளுமன்றமாக செயற்படுமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

கௌரவ உறுப்பினர்களே, அரசியலமைப்புக்கு அமைவாக, இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது என்பதைக் கவனத்தில் கொண்டு வாக்குச் சீட்டை வேறு எந்தவொரு நபருக்கும் காண்பிக்காது பொறுப்புடன் சட்டத்துக் அமைய அழுத்தங்கள் இன்றி வழங்கக் கூடிய முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கோருவதுடன், வாக்களிக்கும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு கையடக்கத்தொலைபேசியையும் எடுத்துச் செல்வதைத் தவிர்க்குமாறும், தனது வாக்கு மற்றும் வாக்குச் சீட்டைப் படம்பிடிப்பது அரசியலமைப்பின் 63வது உறுப்புரிமைக்கு அமைய உங்களால் பாராளுமன்றத்தின் முன்னிலையில் வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு முரணானது என்பதைக் கூற வேண்டும்.

அத்துடன், வாக்கெடுப்புத் தொடர்பாக விவாதிப்பது அல்லது ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது அல்லது வேறு விதத்தில் கேள்வியெழுப்புவது என்பவற்றுக்கு சட்டத்தின் கீழ் சபையினுள் இடமில்லையென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அரசியலமைப்பு, நிலையியற் கட்டளைகள் மற்றும் சம்பந்தப்பட்ட சட்டத்திற்கு எந்த விதத்திலும் எதிராக இன்றைய பாராளுமன்றத்தில் நடத்துகொள்ளாதிருப்பதில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவுகளுக்கு அமைய, பாராளுமன்றத்தினால் அடுத்த சனாதிபதி தெரிவு செய்யும்போது பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவத்தாட்சி அலுவலராக இன்றையதினம் வாக்கெடுப்புப் பணிகளை முன்னெடுப்பார் என்பதுடன், செயலாளர் நாயகம் வழங்கும் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய முழுமையான ஒத்துழைப்பை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவத்தாட்சி அலுவலர் என்ற ரீதியில் இன்றையதினம் வாக்கெடுப்புப் பணிகளுக்குத் தேவையான பணியாளர்களை சபா மண்டபத்துக்குள் அழைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார் என்பதையும் சபைக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

வாக்களிப்பினை மேற்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகத் தற்போது செயலாளர் நாயகம் அவர்களால் அறிவிக்கப்படும்.''

**பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் பின்வருமாறு அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டது:—**

"தற்போது வெற்றிடமாகவுள்ள சனாதிபதி பதவிக்கு வேட்புமனு தாக்கல் செய்துள்ள உறுப்பினர்களில் இருந்து ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பை ஆரம்பிக்கும் முன்னர் சில விடயங்களை உங்கள் தயவான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

வாக்குப்பதிவு ஆரம்பிக்கப்படும் முன்னர், வெற்று வாக்குப்பெட்டி பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் காண்பிக்கப்பட்டு பின்னர் என்னால் அவ் வாக்குப்பெட்டி பூட்டப்பட்டு முத்திரையிடப்படும்.

வாக்குப்பதிவு ஆரம்பிக்கப்படும் போது, என்னால் பரிந்துரைக்கப்பட்ட பிரதிச் பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும் மூலமாக பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளையின்படி தயாரிக்கப்பட்ட பிரிவுப் பட்டியலின் அடிப்படையில் கௌரவ சபாநாயகர் உட்பட ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரின் பெயரும் என்னால் ஒழுங்கு வரிசையில் அழைக்கப்படும்.

உறுப்பினரின் பெயர் அழைக்கப்படும் போது, அவ் உறுப்பினருக்கு முன்பாக வாக்குச் சீட்டின் பின்புறத்தில் எனது சுருக்க கையொப்பத்துடன் குறித்த பாராளுமன்ற உறுப்பினருக்கு வாக்குச் சீட்டு வழங்கப்படும்.

அதன்பின்னர், வாக்களிப்பதற்கென தயார் செய்யப்பட்டுள்ள கூடத்துக்குச் சென்று, வாக்குச் சீட்டில் அவரது வாக்கை இலக்கமிட்டு குறிப்பிடவும்.

கௌரவ உறுப்பினர்களே, வாக்குச் சீட்டில் உறுப்பினர் தேர்ந்தெடுக்க விரும்பும் வேட்பாளரின் முன்பாக காணப்படும் கட்டத்தில் இலக்கம் 1 என கட்டாயமாக குறிக்கப்பட வேண்டும். இலக்கம் 1 ஐத் தவிர வேறு ஏதேனும் குறியீடுகள், அதாவது புள்ளடி அல்லது சரி அடையாளம் அல்லது வேறு ஏதேனும் குறியீட்டை பயன்படுத்தினால், அந்த வாக்குச் சீட்டு செல்லுபடியாகாத வாக்குச் சீட்டாக மாறும் என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

மேலும், 2, 3 போன்ற இலக்கங்களை தான் விரும்பும் ஏனைய வேட்பாளர்களின் விருப்பினடிப்படையில் வாக்குச் சீட்டில் அவர்களுக்கு முன்னால் காணப்படும் கட்டத்தில் குறிப்பிட முடியும்.

கௌரவ உறுப்பினர்களே, இவற்றோடு ஒரு உறுப்பினரால் அளிக்கப்படும்

வாக்குச் சீட்டு எவ்வாறு செல்லுபடியற்றதாகக்கூடும் என்பதை சட்டத்தின் விதிகளின்படி உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

உறுப்பினரை அடையாளம் காணக்கூடிய ஏதேனும் எழுதப்பட்ட அல்லது குறிக்கப்பட்ட வாக்குச்சீட்டு;

தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலராக எனது சுறுக்க கையொப்பம் இல்லாத வாக்குச்சீட்டு;

இலக்கம் 1 என குறித்த கட்டத்திற்குள் குறிக்கப்படாத வாக்குச்சீட்டு;

ஒன்றுக்கும் மேற்பட்ட வேட்பாளர்களின் பெயருக்கு முன்னால் இலக்கம் 1 என குறிக்கப்பட்ட வாக்குச் சீட்டு; மற்றும்

குறிக்கப்படாத அல்லது நிச்சயமற்ற தன்மையால் வெற்றிடமான வாக்குச்சீட்டு

செல்லுபடியற்றதாக கருதப்படும் என்பதை உங்களின் தயவான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அதனடிப்படையில், வாக்குச்சீட்டில் இலக்கம் 1 என்பது அவசியம் இடப்பட வேண்டும் என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். மேலும், 2, 3 போன்ற எண்களை உங்கள் விருப்ப தெரிவின்படி குறிக்கலாம் என்பதையும், இதற்கு மேலதிகமாக, வாக்குச் சீட்டில் நீங்கள் வேறு எதனையும் குறிக்கவோ எழுதவோ கூடாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

அவ்வாறெனில், கௌரவ உறுப்பினர்களே, தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலராக உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றி நாம் இப்போது வாக்குப்பதிவைத் ஆரம்பிப்போம்.

வாக்களிக்கும் நேரத்தில், சபையில் அமைதியை கடைப்பிடித்து, வாக்களிப்புக்கு முழு ஒத்துழைப்பை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த வாக்கெடுப்பு அரசியலமைப்பு மற்றும் தொடர்புடைய சட்டங்களின் கீழ் நடத்தப்படும் முற்றிலும் இரகசிய வாக்கெடுப்பு என்பதால், வாக்குச் சீட்டைக் காட்சிப்படுத்துவது அல்லது வாக்குச் சீட்டை புகைப்படம் எடுப்பது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானதாகும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

எனவே, கௌரவ உறுப்பினர்களே, இப்போது வாக்குப்பதிவு செயற்பாட்டிற்கு செல்வோம். சம்பிரதாயபூர்வமாக உறுப்பினர்களை சபைக்கு அழைப்பதற்கான வாக்கழைப்பு மணி இப்போது 5 நிமிடங்களுக்கு ஒலிக்க விடப்படும்."

**2. 1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சனாதிபதி ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை நடாத்துதல்.**

1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், சனாதிபதியொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை நடாத்துவதில் இச்சபை ஈடுபட்டது.

வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்டு, வாக்குச் சீட்டுக்களினூடாக அளிக்கப்பட்ட வாக்குகளின் பெறுபேறு பின்வருமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் வெளிப்படுத்தப்பபட்டது:—

"கௌரவ உறுப்பினர்களே, 1981 ஆம் ஆண்டின் 2 ஆம் சனாதிபதித் தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், சனாதிபதியொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்குரிய அனைத்து வாக்கெண்ணும் நடவடிக்கைகளும் இப்போது நிறைவுற்றுள்ளது. அதன் பிரகாரம், தேர்தல் பெறுபேறுகள் தற்போது பிரகடனப்படுத்தப்படும்.

| | | |
|---|---|---|
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | - | 223 |
| அளிக்கப்படாத வாக்குகள் | - | 02 |
| அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகள் | - | 219 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 04 |

சனாதிபதிப் பதவிக்காகப் போட்டியிட்ட வேட்பாளர்கள் மூவருக்கும் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | |
|---|---|
| கௌரவ டலஸ் அழகப்பெரும | 82 வாக்குகள் |
| கௌரவ ரணில் விக்கிரமசிங்க | 134 வாக்குகள் |
| கௌரவ அநுர திசாநாயக்க | 03 வாக்குகள் |

கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் எட்டாவது சனாதிபதியாக உரியவாறு தேர்தலொன்றினால் பாராளுமன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களால் வெளிப்படுத்தப்பட்டது. ”

**3. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2022 யூலை 27 ஆம் திகதி, புதன்கிழமை சபை அமர்வு தினமாக இருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2022 சனவரி 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், 2022 யூலை 27 ஆம் திகதி, புதன்கிழமை சபை அமர்வு நேரங்கள், மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 3):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2022 யூலை 27 ஆம் திகதி, புதன்கிழமை மு.ப. 10.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. ஒத்திவைப்பு :** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம், பி.ப. 1.36 மணிக்கு அதன் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க சபாநாயகரால் 2022 யூலை 27 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.